Download (GetImages.ashx?fn=http://indiamediamonitor.in/2022/9/23/Chennai/thumbnail/4b34aff5-62ea-44ad-b0a0-1bb2a770bd73thumbnail.jpg)

# 'இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தமிழகம் 10 சதவீதத்தை வழங்கி வருகிறது'

## டெல்லி கூட்டத்தில் தமிழக அதிகாரி பேச்சு

புதுடெல்லி, செப்.23-
இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தமிழகம் 10 சதவீதத்தை வழங்கி வருவதாக தமிழக அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் கூறினார்.

### பொது விவகார மன்ற கூட்டம்

இந்திய பொது விவகார மன்றத்தின் 9-வது ஆண்டு கூட்டம் டெல்லியில் நடந்தது.

இந்த கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமை செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியும், மேலாண்மை இயக்குனருமான பூஜா குல்கர்னி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கூடுதல் தலைமை செயலாளர் எஸ். கிருஷ்ணன் பேசும்போது கூறியதாவது:-

தமிழகத்தில் முதலீடுகளை ஊக்குவிக்க கொள்கை ரீதியான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

### 40 ஆயிரம் சிறு, குறு நிறுவனங்கள்

பன்னாட்டு நிறுவனங்களை தவிர தமிழகத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்துக்கும் தமிழக அரசு தொழில்துறையில் கொண்டு வந்துள்ள மாற்றமே காரணம் ஆகும்.

தமிழகத்தில் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை முன்னிலைப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. தொழில்துறை வளர்ச்சி கொள்கைகள் எந்தவித தடையும் இல்லாமல் செயல்படுத்தப்படுகிறது. ஒற்றைச்சாளர முறை தொழில் முதலீட்டுக்கு உதவிகரமாக இருந்து வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### மிகப்பெரிய உற்பத்தி மையம்

கூட்டத்தில் பூஜா குல்கர்னி பேசியதாவது:-

நாட்டின் முக்கிய உற்பத்தி மையங்களில் தமிழகமும் ஒன்றாக விளங்கி வருகிறது. வரும் ஆண்டுகளில் மாநில உற்பத்தியை பன்மடங்கு அதிகரிக்க தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மிகப்பெரிய உற்பத்தி மையங்களை கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாக உள்ளது.

இந்தியாவின் மக்கள்தொகையில் 6 சதவீதத்தை கொண்ட மாநிலமாக தமிழகம் இருந்து வருகின்ற போதிலும் நாட்டின் மொத்த உற்பத்தியில் 10 சதவீத பங்களிப்பை தமிழகம் வழங்கி வருகிறது. தமிழகத்தில் இயற்கை வளங்கள் இல்லாவிட்டாலும் மனிதவள திறன் அதிகமாக இருப்பதால் இந்த சாதனையை தமிழகம் எட்டி உள்ளது.

தமிழகத்தின் பாரம்பரிய தொழில்களான காலணி உற்பத்தி, ஜவுளி தொழில்களைத் தவிர வாகனம், செல்போன், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் என்ஜினீயரிங் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் போன்ற 130-க்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களை தமிழகத்தில் நிறுவி உள்ளன.

இவ்வாறு அவர் பேசினார்.

[redacted]